# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1996/1 - 2016 දෙසැම්බර් මස 05 වැනි සඳුදා - 2016.12.05

*1996/1 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டம்**

*16 ஆம் பிரிவின் 2 (ஈ) நியதிகளுக்கு அமைவான அறிவித்தல்*

***192 அறைகளைக் கொண்ட ஹோட்டல் உத்தேச செயற்றிட்டம்***
**கொஸ்கொட, மோதர**

*சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை*

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக இல. 30-2/7, அப்துல் ஜப்பார் மாவத்தை, கொழும்பு 12 எனும் முகவரியில் மெல்வா ஹோட்டல்ஸ் அன்ட் ரிசோட் தனியார் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கொஸ்கொட, மோதர எனும் இடத்தில் நிர்மாணிப்பதற்கான 192 அறைகளைக் கொண்ட உத்தேச ஹோட்டல் செயற்றிட்டம் சம்பந்தமாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலனைக்காக கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2016, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).*

1. *மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு -*
   *இல. 500, டி. பீ. ஜயா மாவத்த, கொழும்பு 10.*
2. *கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,*
   *புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்தை, கொழும்பு 10.*
3. *மத்திய சுற்றாடல் அதிகார சபை -*
   *"பரிசர பியச" இல. 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.*
4. *நகர அபிவிருத்தி அதிகார சபை -*
   *6 மற்றும் 7 ஆவது மாடி, "செத்சிறிபாய", பத்தரமுல்ல.*
5. *மாவட்ட செயலகம், காலி.*
6. *பிரதேச செயலகம், பலப்பிட்டிய.*
7. *பிரதேச சபை, பலப்பிட்டிய*
8. *கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்-*
   *மாவட்ட அலுவலகம், காலி.*

9. கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் - பிரதேச அலுவலகம், இல. 274, பில்லகொட, உணவட்டுண.

இந்த உத்தேச ஹோட்டல் செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2016.12.05 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத் தருகிறேன்.

பீ. கே. பிரபாத் சந்திரகீர்த்தி,
பதில் பணிப்பாளர் நாயகம்,
கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,
4 ஆவது மாடி, புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.

தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011- 2449197
தொலைநகல் இல. : 011- 2438005, 011- 2472623..

12- 685

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.